JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 495/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.1 கோபால் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆனந்தம் பாளையம் சொட்டையனூர் பிரிவில் குடியிருந்து கொண்டு,பால் சொசைட்டியில் Secretary ஆக பணிபுரிந்து வருகிறேன். தேதி நினைவில்லை. கடந்த 2025 ஆம் வருடம் 10வது மாதம் ஒரு நாள் மாலை சுமார் 06.45 மணியளவில், எனது அம்மா கோனேரிப்பட்டி பிரிவு அருகில் உள்ள செழியன் கிளினிக் அருகில் நடந்து வந்து கொண்டிருக்கும் பொழுது பைக் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் உடனடியாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்றேன்.

மேலும், அங்கு வந்து எனது அம்மாவை பார்த்தபோது எனது அம்மாவிற்கு பின்னந்தலை, இடது முழங்கால் மற்றும் இடது தோள்பட்டை ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் நான் எனது மகன்களுக்கும் தகவல் தெரிவித்து, அவர்கள் வந்தவுடன் எனது அம்மாவை ஈரோடு கிருஷ்ணா மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். அன்றைய தினம் என் அம்மாவுடன் நான் இருந்து விட்டதால் அன்று புகார் அளிக்க இயலவில்லை.

பின்னர் மறுநாள் நான் அம்மாபேட்டை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது, என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:17 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். போக்குவரத்து விதிகள் பற்றி எனக்குத் தெரியும் என்றால், ஓரளவு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எதிரி சம்பவ தினத்தன்று வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இடதுபுற ஓரமாகத்தான் வந்து கொண்டிருந்தார் என்பதை நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். நான் சம்பவ இடத்தைச் சென்று பார்த்தேன் என்றால், சரிதான். நான் நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து, அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:24 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-  - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 495/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **PW.2 ரங்கம்மாள்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆனந்தம் பாளையம் கோனேரிப்பட்டி பிரிவில் குடியிருந்து கொண்டு, கூடை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 4 – 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் கோனேரிப்பட்டி பிரிவு அருகில், சாலையின் வெள்ளைக்கோட்டிற்குள் ஓரமாக கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, ஒரு பைக் வந்து என் மீது மோதியது. அதில் எனது கால் மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என் மீது பைக்கை ஓட்டிய நபரை எனக்கு அடையாளம் தெரியாது. அடிபட்டவுடன் எனக்கு எதுவும் தெரியவில்லை. அந்த நபரை நான் அப்போது சரியாக பார்க்கவில்லை.

பின்னர் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். யார் அழைத்துச் சென்றார்கள் என்றோ, எந்த மருத்துவமனைக்கு என்றோ, எனக்கு சரியாக நினைவில்லை. எனது மகன் இந்த விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாக கூறினார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வெத்தலை கடை மேற்கு புறமாக பார்த்து வைத்துள்ளேன் என்றால், சரிதான். பவானி – மேட்டூர் சாலையில் கிழக்கு புறமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நான் சென்று கொண்டிருந்தேன் என்றால், சரிதான். வாகனம் எந்த புறத்தில் இருந்து வந்தது என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான்நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:32 +0530

சென்று கொண்டிருந்த போது, எனது கடைக்குச் செல்ல மேற்கு புறமாக திரும்பும் போது எனது கவன குறைவாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல.

மேலும், நான் மேற்கு புறமாக திரும்பும் போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரு லாரி வந்து கொண்டிருந்தது என்றாலும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரு பேருந்து வந்து கொண்டிருந்தது என்றாலும், நான் அதிலிருந்து தப்பிப்பதற்காக கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால், சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால், சரியல்ல. எனது கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையின் காரணமாகத்தான் விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:39 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 495/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **PW.3பழனிசாமி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 09.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் குதிரைக்கல் மேட்டில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 08.00 மணியளவில் நான் கோனேரிப்பட்டியில் உள்ள அம்மன் கோவிலுக்கு எதிர் திசையில் வந்து கொண்டிருந்தபோது, இரண்டு நாட்களுக்கு முன்பாக அங்கு நடைபெற்ற விபத்து குறித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையெழுத்து போடும்படி கேட்டுக் கொண்டதால் நானும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எவ்வாறு நடந்தது என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்கிற விவரம் எனக்குத் தெரியாது என்றால், தெரியும். நான் ஒருவர் மட்டும்தான் அதில் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். நான் புலன் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:30:53 +0530

என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:31:00 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani